# ***உண்மை விடுதலை தரும்***

இன்று உலகம் சுருங்கி வருகின்றது. உலகின் ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்ச்சி மறு கணமே மறு மூலையில் எம்மை வந்து எட்டுகின்றது. நிலைமை இவ்வாறாக இருந்தாலும், மக்களின் சிந்திக்கும் தன்மை இன்னும் முதிர்ச்சி பெறவில்லை என்றும், நாடுகளை ஆள்பவர்கள் மக்களுக்குப் பக்க பலமாக நின்று செயல் படாதது தான் இதற்குக் காரணம் என்றும் பன்னாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் குறை கூறியுள்ளது. ஏனெனில், தப்பான செய்திகள், தவறான செய்திகள், இல்லாத பொல்லாத செய்திகள் அதாவது **Fake News** இவ்வுலகில் மிகவும் பரவலாகக் காணப்படுவதாகவும், புதிய சமூகத் தொடர்பு சாதனங்கள் **(Social media)**, எங்கும் பிரசித்தி பெற்று வருகின்ற நிலையிலும் கூட இன்னும் உண்மை என்ன என்பதனைக் கண்டு பிடிப்பது சதாரண மக்களுக்குப் பிரச்சினையாகவே இருந்து வருகின்றது என்றும் இச் சங்கம் வற்புறுத்தியுள்ளது.

எடுத்துக் காட்டாக, புதிய சமூகத் தொடர்பு சாதனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யும் பொழுது, பலர் தாங்கள் பிறந்த ஊர், தாங்கள் வாழ்ந்த இடம், தங்களின் தொலை பேசி இலக்கம் ஆகியனவற்றைத் தப்பாகவே பதிவு செய்கின்றனர். ஏனெனில், தங்களின் முற்கால மண வாழ்க்கை போன்றவற்றைப் பற்றி மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று இவர்கள் கருதுகின்றனர். அல்லது, தங்களின் தொலை பேசி இலக்கம் பிறருக்குக் கிடைத்து விட்டால் பல விளம்பரக் கொம்பனிகள் தங்களின் பொருட்களை வாங்கக் கேட்டு தங்களைத் தொந்தரவு செய்யக் கூடும் என்று இவர்கள் அஞ்சுகின்றனர். இந்தச் சூழ்நிலையில், ஒரு கொம்பெனி, அல்லது ஒரு அரசியல் கட்சி அல்லது ஒரு அரசாங்கமே புள்ளி விபரங்களை வெளியிடும் போது அது எந்த அளவுக்கு உண்மைப் புள்ளி விபரம் **(True Data)** அல்லது எந்த அளவுக்கு அது பொய்ப் புள்ளி விபரம் **(Fake Data)** என்ற கேள்வி எம் மனதில் எழும்புகின்றது.

நாங்கள் பத்திரிகையில் அல்லது கணணியில் வாசிக்கும் செய்தியில் நூறு வீதம் உண்மை காணப் படா விட்டால், நாங்கள் தவறாக வழி நடத்தப் படுவோம். எங்கள் மனத்தில் பிறரைப் பற்றியோ, அல்லது பிற மதங்களைப் பற்றியோ, தப்பான அபிப்ராயம் எழக் கூடும். இது சமுதாயத்தில் பிரிவினையை உண்டாக்கும், நாட்டுக்கு நாடு போர் உண்டாகும் அபாயத்தைக் கூட விளைவிக்கும்.

இது போக, முக்கியமான செய்திகள் மக்களை வந்து எட்டுவதும் சற்று பிரச்சினையாகவே தென்படுகின்றது. செலின் டியோன் **(Celine Dion)** 50-ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டினார் என்பதை எல்லாப் பத்திரிகைகளும் மிகப் பிரபலமாக வெளியிட்டன. ஆனால் அதே நேரத்தில், உலகின் 1500 விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து அழிந்து வரும் இயற்கையை நாங்கள் பாதுகாக்க வேண்டிய அவசியத்தினைப் பற்றி முக்கியமான ஒரு கட்டளையை வெளியிட்டனர். அதனைப் பற்றி எந்தப் பத்திரிகையும் மக்களுக்கு எடுத்துக் கூறியதாகத் தெரியவில்லை.

இச் சூழ் நிலையில் ஆண்டு தோறும் வத்திக்கான் நகரிலிருந்து பிரசுரிக்கப் படும் அகில உலகக் கிறித்தவப் பத்திரிகையாளர்களுக்கான செய்தி மடல் வெளி வந்துள்ளது. இந்த செய்தி மடலின் 2018-ஆம் ஆண்டுக்கான தலைப்பு புனித யோவான் நற்செய்தியிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது. அத் தலைப்பு இதுவே: "*உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்*" **("Truth will make you free")** (யோவான் 8:32).

இந்த மடலில், புதிய சமூகத் தொடர்பு சாதனங்களை **(Social media)** நாங்கள் பயன் படுத்தும் போது பொய்யான செய்திகள் பரவாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எங்கள் கடமை என்று பரிசுத்த தந்தை பாப்பரசர் சுட்டிக் காட்டியுள்ளார். பொய்ச்செய்திகள் எம் மனங்களைக் குழப்பும், பிறரன்புக்குப் பாதகம் விளைவிக்கும், மாறாக, உண்மையே எமக்கு விடுதலை பெற்றுத் தரும் என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.

பணித் திறனும் அனுபவமும் நிறைந்த பத்திரிகையாளர்களை வைத்து ஆய்ந்தறிந்து, அலசிப் பார்த்து, வெளியிடப் படும் சிந்தனைகள் நிறைந்த கட்டுரைகளை ஏந்தி வரும் சமூகத் தொடர்பு சாதனங்களை **(Professional Journalism)** அனைவரும் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும் என்றும் பாப்பரசர் கேட்டுக் கொண்டுள்ளார். உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ளவும், நீதி, பிறர் சிநேகம் ஆகிய இரு கோட்பாடுகளின் அடிப்படையில் மற்றவர்களை எடை போடவும், மக்களுக்கிடையே பரஸ்பர நேயம் வளரவும், பத்திரிகைகள் மக்களுக்கு வழி வகுத்துக் கொடுத்தால், உலகில் சமாதானத்திற்கான பாதை அமைக்கப் படும் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"*உண்மை என்றாவது ஒரு நாள் வென்றே தீரும்*" என்பதே பழமொழி. உண்மைக்குச் சான்று பகரவே தான் உலகிற்கு வந்ததாகக் கிறிஸ்து கூறியுள்ளார் (யோவான் 18:37). உண்மையை நாடி, உண்மையை அடைந்து, உண்மையினால் விடுதலை பெறும் ஆசீர் எம் அனைவருக்கும் கிட்டுவதாக.

அனைவருக்கும் உளங் கனிந்த கோடை விடுமுறைக் கால வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவில் அன்புடன்,